**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி.**
**அசல் வழக்கு எண். 246/2017**

PW1 – சண்முகசுந்தரம், த/பெ. அமிர்தலிங்கம்
நாள்–20.11.2023

**1, 3, 4 மற்றும் 7 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :20.11.2023**

2,5 மற்றம் 6 பிரதிவாதிகள் ஏற்கனவே தோன்றா தரப்பினர்களாக ஆக்கப்பட்டுள்ளார்கள்.

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யபப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

நான் யார் யார் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் அமிர்தலிங்கம், அருணா, பிரசன்னா, மதனா, சிங்காரவேலன் மற்றும் தனலெட்சுமி மீது வழக்கு தாக்கல் செய்துள்ளேன். என்ன பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் எனக்கு எனது அப்பா கொடுத்த சொத்தை அவரிடமிருந்து எனக்கு தெரியாமல் 2-ம் பிரதிவாதி ஆவணம் ஏற்படுத்தி கொண்டதால் பாகப்பிரிவினை கோரி தாக்கல் செய்துள்ளேன். எத்தனை புல எண்களுக்கு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் 6 புல எண்களுக்கு. புல எண் தெரியுமா என்றால் தெரியும், புல எண்.144/11, புல எண்.144/7, புல எண்.144/9, புல எண்.144/10 மற்றும் புல எண்.165/பி ஆகும். ஒவ்வொரு புல எண்களுக்கும் தனித்தனியாக விஸ்தீரணம் தெரியுமா என்றால் மொத்தமாக தான் தெரியும், தனித்தனியாக தெரியாது. ஒவ்வொரு புல எண்களுக்கும் நான்கெல்லை தெரியுமா என்றால் தெரியாது. மொத்தமாக தெரியும். ஏன் என்றால் அனைத்து புல எண்களும் மொத்தமாக தான் உள்ளன.

எனது தகப்பனாருக்கும், அவரது சகோதரருக்கும் 11.09.2013-ல் பாகப்பிரிவினை ஏற்பட்டது என்றால் சரிதான். அதில் எந்த அட்டவணை சொத்து எனது தகப்பனாருக்கு கிடைக்கபெற்றது என்றால் ஏ அட்டவணை சொத்து எனது தகப்பனாருக்கு பாகமாக கிடைத்தது. 11.09.2013 தேதிய பாகப்பிரிவினை பத்திரத்தில் புல எண்.144/8 ஏ அட்டவணையில் எழுதப்படவில்லை என்றால்

சரிதான். நான் எனது தகப்பனாரின் முதல் தாரத்தின் மகன் என்றால் சரிதான். என்னுடன் உடன்பிறந்தவர்கள் 2 சகோதரிகள் அவர்களில் சுகன்யா இறந்துவிட்டார். சுகன்யா மனநலம் பாதிக்கப்பட்டவர் என்றால் சரியல்ல. சுகன்யாவின் திருமணத்திற்கு எனது தகப்பனார் ஒப்புக்கொள்ளவில்லை என்றால் சரிதான். நான் தான் செய்துவைத்தேன்.

எனது தகப்பனாரின் 2-வது தாரத்தின் பெயர் தனலெட்சுமி ஆகும். தனலெட்சுமி மூலம் பிறந்தவர்கள் தான் 2 முதல் 4 பிரதிவாதிகள் என்றால் சரிதான். எனது தகப்பனார் எனக்கு எந்த ஆவணத்தில் எழுதி கொடுத்தார் என்றால் 50 ரூபாய் பத்திரத்தில் எழுதி கொடுத்தார். எந்த சொத்தை பொருத்து எனது தகப்பனார் எழுதி கொடுத்தார் என்றால் வழக்கு சொத்து மற்றும் மேற்கண்ட சொத்து குறித்தும் எழுதி கொடுத்தார். எந்த தேதியில் எழுதி கொடுத்தார் என்றால் தேதி நினைவில் இல்லை. 10 வது மாதம் 2012 ஆம் வருடம் ஆகும். எனது தகப்பனார் எழுதி கொடுத்ததாக சொல்லும் ஆவணம் பதிவு செய்யப்படவில்லை என்றால் சரிதான். எனது தகப்பனார் எழுதி கொடுத்த ஆவணத்தின் பத்திரம் ஒப்புகை பத்திரம் ஆகும். அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். ஒப்புகை பத்திரம் எனது தரப்பில் குறியீடு செய்யப்படவில்லை என்றால் சரியல்ல.

1-ம் பிரதிவாதி எனக்கு எந்த தேதியிலும் தாவா சொத்தை பொறுத்து எவ்வித ஆவணமும் எழுதி கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. 03.02.2014-ல் நான் ஊரில் தான் இருந்தேன் என்றால் சரிதான். வா.சா.ஆ.2 ஏற்பட்ட காலத்திலேயே எனக்கு தெரியும் என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.2 சட்டப்படி செல்லத்தக்கது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.2 -ல் கண்ட சொத்துக்கள் 03.02.2014 முதல் 2-ம் பிரதிவாதி வசம் தான் இருந்து வருகிறது என்றால் சரியல்ல. 2-ம் பிரதிவாதி 09.10.2017-ல் 7-ம் பிரதிவாதிக்கு எழுதி கொடுத்த ஆவண எண்.1336/2017 செல்லதக்க ஆவணம் என்றால் சரியல்ல. 09.10.2017 முதல் ஆவண எண்.1336/2017-ன்படி புல எண்.165/1 உள்ள 2 ஏர்ஸ் நிலமும் அதில் உள்ள மின் இணைப்பும் மற்றும் வழக்கு அ அட்டவணை சொத்தில் கண்ட 2,4,5

மற்றும் 6 அயிட்ட சொத்துக்களை 7-ம் பிரதிவாதி தான் அனுபவித்து வருகிறார் என்றால் சரியல்ல. வா.சா-ஆ.2-ல் உள்ள 7 ஆம் பிரதிவாதிக்கு விற்பனை செய்தது போக இதர சொத்துக்கள் 2-ம் பிரதிவாயின் அனுபவித்தில் இருந்து வருகிறது என்றால் சரில்யல. புல எண்.144/8 எனது தகப்பனார் அனுபவித்தில் தான் இருந்து வருகிறது என்றால் சரியல்ல.

வழக்கு அ அட்டவணை சொத்து என்னுடைய அனுபவித்தில் இல்லாத நிலையில் 20.09.2017-ல் பிரதிவாதிகள் இடையூறு செய்ததாக சொல்லியுள்ளது பொய் என்று சொன்னால் சரில்ல. வழக்கு அ அட்டவணை சொத்தில் எவ்வித உரிமையில்லை என்றும் உண்மையான உரிமையாளருக்கு எதிராக தாக்கல் செய்துள்ள இவ்வழக்கு நிலைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல. 7-ம் பிரதிவாதி கிரயம் பெறுவதற்கு சுமார் எத்தனை நாட்களுக்கு முன்பு போய் சொன்னேன் என்றால் 1 மாதத்திற்கு முன்பு சொன்னேன். வழக்கு சொத்துக்கள் பூர்வீக சொத்து அல்ல என்றும் 1-ம் பிரதிவாதியின் தனிப்பட்ட சொத்து என்றும் எனக்கு எவ்வித உரிமையும் இல்லை என்றும் சொன்னால் சரியல்ல. இதுநாள்வரையில் பாகப்பிரிவினை கோரி நான் வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

எனது தகப்பனார் தற்போது வரை உயிருடன் தான் உள்ளார். 1-ம் பிரதிவாதியின் தனிப்பட்ட சொத்து என்பதால் அவருடைய சொத்துக்களை பொறுத்து வில்லங்க பாராதீனம் செய்ய முழு உரிமை உள்ளது என்றும் அதை தடை செய்ய கோர இயலாது என்றால் சரியல்ல. பி அட்டவணை சொத்தை பொறுத்து 1-ம் பிரதிவாதி 2 முதல் 4 பிரதிவாதிகளின் பெயரில் எழுதி வைத்துள்ள செட்டில்மண்ட் ஆவணம் எண்.193/2014 செல்லதக்கது என்றால் சரியல்ல. தாவா பி அட்டவணை சொத்தை பொறுத்து ஆவணம் ஏற்பட்ட தேதியிலேயே தெரியும் என்றும் வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. தாவா சி அட்டவணை சொத்துக்கள் 1-ம் பிரதிவாதியின் தனிப்பட்ட சுவாதீனத்தில் இருந்து வருகிறது என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ. 2 மற்றும் வா.சா.ஆ.3 ஏற்பட்ட காலத்திலேயே எனக்கு தெரியும் என்றும் கால தோஷத்தால் பாதிக்கப்பட்டுள்ளது

என்றால் சரியல்ல. புல எண்.165/1-ல் 38 ஏர்ஸ் 1-ம் பிரதிவாதி அவரது மனைவி தனலெட்சுமி பெயரில் செட்டில்மண்ட் எழுதி வைத்துள்ளார் என்றால் சரிதான். அதனால் புல எண்.165/1-ல் 38 ஏர்ஸ் நிலம் தனலெட்சுமியின் சுவாதீனத்தில் இருந்து வருகிறது என்றால் சரியல்ல. புல எண்.165/1 தற்சமயம் புல எண்.165/1 ஏ, 1 பி என உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். சீர்காழி வட்டம், காத்திருப்பு கிராமத்தில் புல எண்கள்.296/1, 296/3, 296/4, 296/5 1-ம் பிரதிவாதியின் தனிப்பட்ட வருமானத்தை கொண்டு மைனராக இருந்த எனது பெயரில் 04.10.1990-ல் இரண்டு கிரய ஆவணங்கள் மூலம் பெறப்பட்டது என்றால் சரியல்ல. என்னுடைய பிறந்த வருடம் 1985 ஆம் வருடம் ஆகும். எனது பெயரில் வாங்கப்பட்ட நிலங்கள் எந்த வருமானத்தை கொண்டு வாங்கப்பட்டது என்றால் எனது தாயார் இறந்தவுடன் எனது தகப்பனார் 2-வது திருமணம் செய்து கொள்வதற்கு முன்பு எனது தாயாரின் நகைகளை விற்று அதன் மூலம் கிடைத்த பணத்தை கொண்டு கிரயம் வாங்கப்பட்டது.

எனது தாயார் எப்போது இறந்தார் என்றால் 01.07.1990-ல் இறந்தார். தனலெட்சுமியை எனது தகப்பனார் எப்போது 2-வதாக திருமணம் செய்து கொண்டார் என்றால் 12.12.1990 ஆண்டு ஆகும். எனது அம்மாவின் நகைகள் எங்கு விற்பனை செய்யப்பட்டது என்ற விவரம் எனக்கு தெரியாது. எத்தனை பவுன் நகைகள் எனது தாயாருக்கு பாத்தியப்பட்டது என்றால் எனக்கு தெரியாது. யார் சொன்னதின் அடிப்படையில் எனது தாயாரின் நகையை கொண்டு வாங்கப்பட்டது என சொல்கிறேன் என்றால் எனது தகப்பனாரே சொன்னார். எப்போது எனது தகப்பனார் சொன்னார் என்றால் 2008 ஆம் வருடத்திற்கு முன்பே. நான் வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றும் காத்திருப்பு கிராமத்தில் எனது பெயரில் வாங்கப்பட்ட சொத்துக்கள் எனது தகப்பனாரின் சம்பாத்தியத்தை கொண்டு வாங்கப்பட்டது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.4-ல் புல எண்களின் விஸ்தீரணம் குறிப்பிடப்படவில்லை என்பதால் அது ஏற்றுக்கொள்ளதக்க ஆவணம் இல்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.4 வழக்கிற்கு பின்னிட்டு

பெறப்பட்ட ஆவணம் என்றால் சரிதான். வா.சா.ஆ.5-ல் புல எண்கள் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.6 ஆவணம் வழக்கிற்கு பின்னிட்டு செலுத்தியது என்றால் சரிதான். வா.சா.ஆ.6 ஆவணத்தில் புல எண்ணின் உட்பிரிவு குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.7 ஆவணம் வழக்கிற்கு பின்னிட்டு செலுத்தியது என்றால் சரிதான். வா.சா.ஆ.7 ஆவணத்தில் புல எண்ணின் உட்பிரிவு குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான்.

வழக்கு தாக்கல் செய்வதற்கு முந்தைய சிட்டா, அடங்கல் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். 11.09.2013-ல் தான் எனது தகப்பனாருக்கும் அவரது சகோதரருக்கும் பாகப்பிரிவினை ஏற்பட்டதாக கூறியுள்ள நிலையில் 2012-ல் எனது தகப்பனார் ஒப்புகை பத்திரம் எழுதி கொடுத்ததுள்ளதாக சொல்லியுள்ளது ஏற்கதக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்துக்கள் வழக்கிற்கு முன்பும், பின்பும் என்னுடைய சுவாதீனத்தில் இல்லை என்று சொன்னால் சரியல்ல. நான் கோரியுள்ளவாறு இவ்வழக்கில் எனக்கு எவ்வித பரிகாரமும் கிடைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல. தாவா செலவுத்தொகையுடன் தள்ளபடி செய்யதக்கது என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.